ஓம்.

பரப்ரஹ்மணேநமஃ.

ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள்

அருளிச்செய்த

போதாரியை யென்று

வழங்கப்படும்

# சுவாத்துமநிரூபணம்.

இது

தஞ்சைமாநகரம்

வெ. குப்புஸ்வாமிராஜு அவர்களால்

தமிழில்

மொழிபெயர்க்கப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பிரசுரிக்கப்பட்டது.

---

விளம்பி௵ மார்கழி௴.

---

இதன்விலை அணா 3

# விற்பனைக்குள்ள புத்தகங்கள்.

| | | ரூ. அ. பை. |
|---|---|---|
| தத்துவமஸிமகாவாக்கிய உபதேசம் | ... | 0—2—0 |
| விசாரசந்திரோதயம் (வினாவிடை) | ... | 1—0—0 |
| ஹடயோகப்பிரதீபிகை (சம்ஸ்கிருத மூலமும் தமிழுரையும்) ... | ... | 1—8—0 |
| சூதசங்கிதை மூலம் தமிழ் ... | ... | 1—8—0 |
| பிரமகீதை உரை ... ... | ... | 2—8—0 |
| ரிபுகீதை ... ... | ... | 2—8—0 |
| அவதூதசம்வாதம் உரை ... | ... | 0—2—0 |
| நாஞ்ஜீவவாதக்கட்டளை ... | ... | 0—1—0 |

☞ இவை மதராசு ரிப்பன் அச்சுக்கூடத்திலும், தஞ்சாவூர் ரப்பர்ஸ்டாம்பு செய்யும் வி. கோவிந்தன் அண்டு பிரதர்ஸ் அவர்களிடத்திலும் கிடைக்கும்.

சிவமயம்.

# முகவுரை.

நிச்சயமாக இச்சம்ஸாரத்தில், பிரவாகத்தில் விழுந்தவனைப்போலச் சர்வசாமானியமா யடையப்பட்ட சஞ்சித வாகாமிய பிராரப்த பேதமான மூவகைக் கருமமுடையவர்களும், சுழலுஞ் சக்கரம்போல அடிக்கடி வரும் சரீர தாரண முதலிய ஷடூர்மி போகக் கிரமத்தால் ஜனன மரணாதிப் பிரவாகத்தி லகப்பட்டவர்களும், அதன்பின் நாநாவித துக்க போக முதலியவற்றால் இடைவிடாது கிலேசப்படுகின்றவர்களுமாகிய நரர்களுக்கு, அவர்களைக் கடத்தற்கரிய பவசாகரத்தினின்றுங் கரையேற்றற்பொருட்டு என்றும் முயல்பவர்களும், இயல்பான கிருபையுள்ளவர்களுமாகிய வியாசாதியர் ஸ்மிருதி சாஸ்திர இதிகாச புராணாதிகளைச் செவ்விதிற் செய்தருளினர். அத்தன்மைய அளவுபடா நூல்கள் எல்லாராலும் ஊகித்தற்கரிய தன்மையால் விசாரிக்கக் கூடாதனவாயிருத்தலின், அவற்றான் ஆத்மாநாத்ம விசாரம் அறிதற்கரியதேயாம். இதனால் சம்சாரிகளுக்கு "𑌪𑍁𑌨𑌰𑌪𑌿 𑌜𑌨𑌨𑌂 𑌪𑍁𑌨𑌰𑌪𑌿 𑌮𑌰𑌣𑌂 𑌪𑍁𑌨𑌰𑌪𑌿 𑌜𑌨𑌨𑍀𑌜𑌠𑌰𑍇 𑌶𑌯𑌨𑌂 | மீண்டும் பிறத்தல், மீண்டும் இறத்தல், மீண்டும் தாயி னுதரத்திற்

## முகவுரை.

சயனித்தல்'' என்றன் முதலிய முறையான் சம்சாரம் நீக்க மின்றிப் பெறப்பட்டுளதாகின்றது. அன்றியும் முமுக்ஷுக்களுக்குப் பவசாகரத்தைக் கடக்கவேண்டுமென்றுண்டாகு மிச்சைக்குக் கேடுண்டாதல் சம்பவிக்கின்றது. அங்ஙனமாதல் கூடாது; அஃதிருக்கலாகாது; கிருபணரும் வீடுபெறுக என்றெண்ணி, அவர்களுக்கு இச்சிறு நூலானுயினும் வேதாந்த பரிபாஷை யுணர்ச்சி நன்கு யுண்டாகுக' வென்று இரங்கிய உள்ளத்தினரும், எல்லாப் பற்றுக்களும் விலகப் பெற்றவரும், மோக்ஷ மொன்றன்கண்ணே கருத்துடைய வருமான ஸ்ரீமத் பரம ஹம்ஸ பரிவிராஜகாசாரியருமாகிய ஸ்ரீமத் சங்கராசாரியர்களால் வேதாந்த பாகங்கள் எல்லாவற்றினின்றும் கடைந்தெடுக்கப்பட்ட பொருள் வடிவினதாகிய இவ்வாரியாவிருத்தத்தானமைந்த சுவாத்ம நிரூபண மென்னும் நூல் செய்தருளப்பட்டது. இது தமிழ் நாட்டாருக்கும் உபயோகமாவான் கருதித் தமிழில் இலகுவான நடையில் மொழிபெயர்க்கப்பட்டது.

வெ. குப்புஸ்வாமி ராஜு.

ஸ்ரீகுருப்யோநம:.

போதாரியை

என்னும்

# சுவாத்தும நிரூபணம்.

## மங்கலம்.

எதனால் முமுக்ஷுக்களால் சகித்தற்கரிய துவந்துவங்கள் மத்திக்க (களைய) ப்படுகின்றனவோ, எதன் பொடியாகிய பஸ்மத்தால் (விபூதியினால்) பிராந்தியாகிய இயக்கனது அழிவு விரிகின்றதோ, அத்தகைய ஸ்ரீகுருவின் சரண மிரண்டினையும் யான் நமஸ்கரிக்கின்றேன். (க)

எவருடைய சரண மிரண்டும் தத்பதத்தின் பொருளாகிய அத்துவயாநுபவத்தை உபதேசிக்குமோ, அத்தகைய சகல சந்தேகங்களையும் நாசஞ் செய்பவரும், கிருபையுள்ளவருமாகிய தேசிகவரனை நமஸ்கரிக்கின்றேன். (உ)

சம்சாரமாகிய தாவாநலத்தால் (காட்டுத் தீயால்) செவ்வையாய்த் தபிக்கப்பட்டவனும், சகல சாதனங்களோடுங் கூடியவனுமாகிய சிஷ்யன், சுவாத்துமநிரூபண நிபுணவாக்கியங்களாலும் (தத்துவம் பதார்த்த ஐக்கியத்தைச் சொல்லுத

ற்குரிய உபநிஷத் வசனங்களாலும்), * குருவினாலும் உபதேசிக்கப்படுகின்றான். (௩)

தானிருக்கின்றான் என்னும் இப்பொருளில் எந்தப் புருடனுக்குச் சந்தேக முளது? (ஒருவனுக்கும் இல்லை யென்றவாறு) ஈண்டுஞ் சம்சயமுளதேல், சம்சயிப்பவன் எவனோ அவனே நீயாகின்றாய். (உண்மை இன்மைகளை யநுபவிப்பவன் ஆத்மாவேயென்பது பொருள்.) (௪)

யானில்லையென்று எவன் அறிகின்றானோ, அவன் இல்லை யென்று (இல்லையென்னுந் தன்மையின் சாக்ஷித் தன்மை யாகவும்) சத்தியமாகிய (முக்காலத்தும் வாதிக்கப்படாத) பிரமத்தை (ஆத்மாவை) யே அறிகின்றான். யானிருக்கின்றேன் என்றறிவதினால் (யானென்னு முணர்விற்கு விடயமாம் ஆன்மா, என்று முளதாய் நிற்கின்றதென்றறிவதி

---

* "தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத் ஸமித்பாணி: ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் | தஸ்மை ஸ வித்வாநுபஸந்நாய ஸம்யக் ப்ரஶாந்தசித்தாய ஶமாந்விதாய - அதை (ஆத்மாவை) யறிதற்பொருட்டு அவன் சமித்தைக் கையிலுடையவனாய் வேதார்த்தங்களுணர்ந்தவரும் பிரமநிஷ்டருமாகிய குருவையே யடைய வேண்டும். அவ்வித்துவான் சரணடைந்தவனும், மிக்க சாந்தசித்தமுடையவனும், சம முடையவனுமாகிய அவ (சிஷ்ய) னுக்குப் பிரம வித்தையை உபதேசித்தல் வேண்டும்.'' என்னும் முண்டக சுருதியினால் தேசிகனது உபதேசத்தைப்பெற்றே பிரமவித்தையைப் பெறல் வேண்டும். தனது யுக்தி புத்திகளாலும், தர்க்க முதலியவற்றாலும் அடையப் படமாட்டாது.

னல்) இப்புருடன் பிரமத்தினைத் தானே (பிரயாசையின்றி) அறிகின்றான். (௫)

ஆதலால் நீயே பிரமம், யான் பிரமம் அல்லனென்னும் இது மோகமாத்திரமாம். (யான் பிரமம் அல்லன் என்னும்) மோகத்தால் பேதமுண்டாகின்றது. அது (பேதம்) காரணமாகச் * சகல கிலேசங்களும் உண்டாகின்றன. (இதனால் அவித்தையினாற் றோன்றிய யான் பிரமமல்லன்; ஜீவன் யான் என்னும் பேத புத்தி விடத்தக்கதாமென்பது பொருளாகின்றது.) (௬)

பஞ்சகோச விவேகஞ் செய்தவன் இப்பஞ்சக் கிலேசங்களை யடைகிறதில்லை. ஆகையாலே, விவேக சாமர்த்திய புத்தியுள்ள புருஷர் பஞ்சகோசங்களை இடைவிடாது விசாரிக்கின்றனர். பஞ்சகோசத்திலுள்ள கிலேசங்களாகிய இவை ஆத்ம தர்ம மன்றென நிச்சயஞ் செய்கின்றனர் என்பது பொருள். (௭)

ஒன்றனுள் ஒன்றாய் (அன்னமயத்தில் பிராணமயன், பிராணமயனில் மனோமயன் என்னுங் கிரமமாக) நிற்பனவாகிய அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆநந்தமயம் என்னும் பஞ்சகோசங்களின் விவேகத்தால் ஆத்மா பிரகாச(அபரோக்ஷ)த்தன்மையை அடைகின்றது.()

* எல்லாக்கிலேசங்களும் அவித்தை, அஸ்மிதை, இராகம், துவேஷம், அபினிவேசம் என்பனவாம். இவற்றைப் பஞ்சக்கிலேச மென்பர். இவற்றி னிலக்கணத்தை விசார சந்திரோதய முதலியவற்றிற் காண்க.

இச்சரீரம் அன்னமயமென்னும் கோசமாம்; இது ஆத்மாவன்று; கடம்போல ஜடமாம். இதனுற்பத்திக்கு முன்னும் பின்னும் இதன் இன்மை காணப்படுதலால். (ஆத்மா இவற்றின் வேறாய் இவற்றை யறிவதாமென்பது பொருள்.)

தேகத்தில் வளைபட்ட (அன்னமய கோசத்திற்கு ளிருக்கும்) பிராணனது விகாரமாகிய இந்த வாயுவிசேஷம் பிராணமய மென்னும் கோசமாகின்றது. பசிதாக முதலியவற்றால் துன்பமடையும் இக்கோசத்திற்கு எங்ஙனம் ஆத்மத்தன்மை உண்டாகும்? (ஆத்மத்தன்மை சம்பவியாதென்றவாறு.) (க0)

எது சரீரத்தில் யானென்னுந் தன்மையையும், வீடு முதலியவற்றில் எனதென்னுந் தன்மையையும் செய்கின்றதோ, எதனால் இராகத் துவேஷ முதலியன விதிக்கப்படுகின்றனவோ, அது மனோமய கோசமாம்; ஆத்மாவன்று. (இராகத்துவேஷ முதலியவற்றிற்குக் காரணமாயிருத்தலின்.) (கக)

சுழுத்தியில் தானே இலயமடைந்துள்ளதும், சாக்கிரத்தில் (நக சிகை பரியந்தமான) சரீர முழுவதினும் வியாபித்துள்ளதும், சைதன்னியம் பிரதிபிம்பித்தற்கு ஏதுவாயுள்ளதும், விஞ்ஞானசத்தத்திற்கு வாச்சியமாயுள்ளதுமான புத்தியும் ஆத்மா வன்று. (கஉ)

சுழுத்தியின்கணுள்ள சுகலேசங்களால் சுகியாகின்றேன் (சுகமாய்த் தூங்கினேன்) என்று எது அறிகின்றதோ, அது ஆநந்தமயமென்னுங் கோசமாம். (அகங்கார சப்தவாச்சிய

மாம்.) *அவ்வகங்காரம் எங்ஙனம் ஆன்மாவாகும்? (ஆகாதென்பது பொருள்.) (௧௩)

எது பிம்பவடிவாகப் பிரகாசிக்கின்றதோ அவ்வானந்தமே சகல பிராணிகளுக்கும் ஆன்மாவாம்; அன்னமயாதிகளின் உற்பத்திக்கு முன்னும் நாசத்திற்குப் பின்னும் இருத்தலானும், விகாரமுடைமையின்மையானும், வாதிக்கப்படுந் தன்மை யின்மையானுமென்க. (௧௪)

* இப் பஞ்சகோசமும் ஆத்மா அல்லவென்னும் நிராகரணத்தால் அவ்வச் சுருதி யுக்தி யாபாசங்களால் சொல்லப்பட்ட பௌத்தர் முதலிய வாதிகளின் மதநிராகரணம் அறியத்தக்கது. ஆண்டு அவர்களால் அன்னமய முதலியவற்றிற்கு ஆத்மத்தன்மையைக் கூறும் சுருதிகள் அவ்வாதங்களிற் பொருத்தப்படுகின்றன. "யதோவாஇமாநிபூதாநிஜாயந்தே-எதனினின்றும்இப்பூதங்கள்உண்டாகின்றனவோ" என்னும் இச்சுருதியினால் நிச்சயமாக ஜகத்காரணத் தன்மையாகிய பிரமத்தின் இலக்ஷணம் சொல்லப்பட்டிருக்கின்றதென்பது அவர்கள் அபிப்பிராயம். அதுவும் அவ்வக்கோசங்களுக்குப் பிரமத்தன்மையைப் பிரதிபாதிக்கும் சுருதிகளால் சொல்லப்படுகின்றது. அச்சுருதிகளாவன:—" அந்நம்ப்ரஹ்மேதிவ்யஜாநாத் - அன்னம் பிரமம் என்று அறிந்தான்." "அந்நாத்த்யேவகல்விமாநிபூதாநிஜாயந்தே | அந்நேநஜாதாநிஜீவந்தி-அன்னத்தினின்றே நிச்சயமாக இப்பூதங்களுண்டாயின; அன்னத்தினால் உண்டானவைகள் ஜீவிக்கின்றன" என்னும் தைத்திரீய சுருதியினால் அன்னமயத்திற்குப் பிரமத்துவமும் "ப்ராணோப்ரஹ்மேதிவ்யஜாநாத்| ப்ராணாத்த்யேவகல்விமாநிபூதாநிஜாயந்தே - பிராணன் பிரமமென்று அறிந்தான். பிராணனினின்றேநிச்சயமாகஇப்பூதங்களுண்டாயின"என்னும்சுருதி

இவ்வன்னமய முதலியவற்றிற்கு வேறாக ஒன்றும் அநுபவிக்கப்பட வில்லையெனின், அன்னமயாதிகளுக்கு வேறாக அவற்றை யனுபவிப்பவன் (அறிபவன்) ஒருவனுளன் என்பதில் எவனுக்கும் மயக்கமில்லை. (எல்லாராலும் கடாதி ஞேய பதார்த்தங்களினும் அவற்றை யறியும் ஞாதா வேறென்றே அநுபவிக்கப்படுகின்றது.) (கரு)

---

யினால் பிராணமயத்திற்குப் பிரமத்தன்மையும், "மநோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத்| மநஸோ ஹ்யேவ கல்விமாநி பூதாநி ஜாயந்தே-மனம் பிரமமென்று அறிந்தான்; மனத்தினின்றே நிச்சயமாக இப்பூதங்களுண்டாயின" என்னுஞ் சுருதியினால் மனோமயத்திற்குப் பிரமத்தன்மையும், "விஜ்ஞாநம் ப்ரஹ்மேதி வ்யஜாநாத்| விஜ்ஞாநாத்த்யேவ கல்விமாநி பூதாநி ஜாயந்தே-விஞ்ஞானம் பிரமமென்று அறிந்தான்; விஞ்ஞானத்தினின்றே நிச்சயமாக இப்பூதங்களுண்டாயின" என்னுஞ் சுருதியால் விஞ்ஞானமயத்திற்குப் பிரமத் தன்மையும், "ஆநந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத்| ஆநந்தாத்த்யேவ கல்விமாநி பூதாநி ஜாயந்தே-ஆநந்தம் பிரமமென்று அறிந்தான்; ஆநந்தத்தினின்றே இப்பூதங்களுண்டாயின" என்னுஞ் சுருதியினால் ஆநந்தமயத்திற்குப் பிரமத்தன்மையுங் கூறுகின்றார்கள்; யுக்திகளும் ஆண்டு அவர்களால் காட்டப்படுகின்றன. அதுவும் சம்பவியாது. சுருதிகளுக்கு வேறு தாற்பரியமாம்:—சாலிக்கிராம முதலிய பிரதிமை முதலியவற்றில் விஷ்ணுவாதிபுத்தி வைக்கவேண்டியதுபோல ஒவ்வொரு கோசத்தையும் உபாசித்தற்பொருட்டு அவற்றிற்கு அங்கங்கே பிரதிமை திருஷ்டி வைக்கவேண்டு மென்பதாம். ஆதலால் பௌத்தர் முதலிய வாதிகள் அவித்தையான் மறைக்கப்பட்டவராவரென்பது பிரசங்கத்தால் நிரூபிக்கப்பட்டது.

தானே அனுபவவடிவமாயிருத்தலான், இதற்கு (ஆன்மாவிற்கு) அநுபவிக்கப்படுந்தன்மை யில்லையாயினும், ஞானசொரூபமா யிருப்பதற்கு இல்லையெனும் சங்கை யெக்காலத்து மின்று. (கசு)

சூரியன் எல்லா ஜகத்தையும் விளக்கியும் தான் மற்றொன்றால் விளக்கப்படாததுபோல அநுபவ சொரூபமாகிய ஆத்துமா எல்லாவற்றையும் அநுபவிக்கின்றது. எல்லா ஜகத்தானும் இஃது அநுபவிக்கப்படுகிறதில்லை. (கஎ)

அது, இது, அத்தன்மையது, இத்தன்மையது, அவ்வளவினது, இவ்வளவினது என்று எது ஆகவில்லையோ, அது பிரமமென்று நிச்சயிக்கத்தக்கது. அங்ஙனமின்றேல், அது விஷயமும் பரோக்ஷமுமாம். (கஅ)

எங்கும் இது, இது என்று காணப்படும் வஸ்துக்கள் வாதிக்கப்படுங் காலத்திலும், இஃதென்று சுட்டப்படாததும் வாதிக்கப்படாததுமாயுள்ள தத்துவம் பிரமமாம். மூன்று காலத்திலு மிருத்தலால் இதற்குப் பரோக்ஷத்தன்மையில்லை. (ககூ)

பிரமம் சுயம்பிரகாசமாயிருத்தலால் அறியப்படாததாயினும் பரோக்ஷமாகாது. சத்தியஞானானந்தம் பிரமம் என்று சுருதியே யிதன் இலக்ஷணத்தை வெளிப்படுத்துகின்றது. ()

அன்னமயாதி கோசவடிவசக்தி (அவித்தை) யாகிய உபாதியுளதேல் அந்தப் பிரமத்திற்கு ஜீவேசுவரத் தன்மைகள் உண்டு. உபாதியிலையேல், அச்சீவேசுவரத் தன்மைகளின்மையால் விசேஷமின்றிய ஆத்ம சொரூபம் விளங்கும்.

சகல திருசியங்களும் வாதிக்கப்படுங்கால் ஒன்றுமில்லை யென்பது உலகப் பிரசித்தமாமெனின், ஒன்றுமில்லையெ ன்று பெறப்படுவதெதுவோ, அது பிரமமென்று வேதத்தி னூற் பெறப்படுகின்றது. (உஉ)

இவ்வாறு பஞ்சகோச விசார முடையவர்களாயினும், தத்துவமசியாதிவாக்கிய விசாரமில்லாதவர்களுக்கு ஆத்மா பிரத்தியக்காய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கினும், பரோக்ஷமாகவே தோற்றும். (செவ்வையாய்த் தோற்றாதென்றவாறு.)

ஆதலால் பதார்த்தசோதன பூர்வகமாக வாக்கியத்தின் அர்த்தத்தை விசாரித்து, குருவின் கிருபையாகிய சாமர்த்தியத்தால் அதிகாரியானவன் க்ஷணத்தில் ஆத்மாவைச் சாக்ஷாத் கரிக்கின்றான். (உச)

(யான் பருத்தவன், யான் இளைத்தவன், யான் செவிடன், யான் குருடன் என்று) தேகேந்திரிய தர்மங்களை ஆத்மாவினிடத்து அபேதமாக (தாதாத்மியமாக) ஆரோபித்து, கர்த்திருத்துவ முதலிய அபிமானத்தைச் செய்யும் போதம் எதுவோ, அது துவம்பதத்தின் வாச்சியார்த்தமாம். (உரு)

சரீர அகங்கார கரணங்களுக்குச் சாக்ஷியாய் அவற்றிற்கு வேறாய் விளங்கும் ஞானம் எதுவோ, அது துவம்பதத்தின் இலக்ஷியார்த்தமெனப்படும். (உசா)

உபநிடத வாக்கியங்களால் அறியத்தக்கதும், சகல ஜகத்திற்கும் உபாதான காரணமாயிருப்பதும், சர்வஞ்ஞத்துவ முதலியவற்றோடு கூடியதுமான சைதன்னியம் எதுவோ, அது தத்பதத்தின் வாச்சியார்த்தமாம். (உஎ)

கர்த்திருத்துவ முதலிய நாநா உபாதிகளினின்று நீங்கியதும், பிரபஞ்சாதீதமும், விசுத்தமும் (அஞ்ஞானமின்றியதும்), அத்வைதமும், அக்ஷரமும், அநுபவத்தா லறியத்தக்கதுமாகிய சைதன்னியம் எதுவோ, அது தத்பதார்த்தத்தின் இலக்ஷியார்த்தமாம். (உஅ)

தத் துவம் பதங்களின் சமானாதிகரணியம், அதன்பின் பதார்த்தங்களின் விசேஷண விசேஷியத்தன்மை, பின்னர் ஆத்மாவின் இலக்ஷியலக்ஷகத்தன்மையென மூவகைச் சம்பந்தமுண்டு. (உகூ)

வெவ்வேறு பொருளிலிருப்பனவாகிய சொற்கள் ஒரு பொருளிலிருத்தல் சாமானாதிகரணியமாமென்று இலக்ஷணமுரைப்போர் கூறுவர். (௩0)

பிரத்தியக்ஷத் தன்மை பரோக்ஷத் தன்மைகளுக்கும், பரிபூரணத்தன்மை இரண்டாவதோடுகூடிய தன்மைகளுக்கும் ஒன்றற்கொன்று விரோதமிருத்தலால், அவ்விரோதம் நீங்க, அவற்றிற்கு இலக்ஷணையினாற் பொருள் கொள்ளல் வேண்டும். (௩க)

வேறு பிரமாணங்கள் செல்லுதலின்றி முக்கியார்த்தம் (சொல்லப்பட்ட பொருள்) கொள்ளப்படாமையுண்டாகிய காலத்து முக்கியார்த்த சம்பந்தமுடைய பொருளில் சொற்களிருத்தல் எதுவோ, அதுவே இலக்ஷணையென்று சொல்லப்படும். (௩உ)

வாச்சியார்த்தம் முழுவதையும் விட்டு, அதன் சம்பந்தமாகிய வேறு பொருளிலுள்ளபத ச்தின் விருத்தியெதுவோ,

அது ஜகத் திலக்ஷணை (விட்டலக்ஷணை) யெனப்படும். அது கங்கையில் இடைச்சேரியென்பதுபோலவாம். அஃது ஈண்டுக்கொள்ளத் தக்கதன்று. (௩௩)

வாச்சியார்த்தத்தினை விடாமல் எதன் விருத்திக்கு (சக்திக்கு) வாச்சியார்த்தத்திற் கந்நியமான பொருளில் பிரவிருத்தி யுண்டாகின்றதோ, அஃது அஜகத் திலக்ஷணை (விடாதலக்ஷணை) யென்று சொல்லப்படும். அது சிவப்போடுகின்றது என்பது போலவாம். அதுவும் ஈண்டுக்கொள்ளத்தக்கதன்று.

வாச்சியார்த்தத்தின் ஏகதேசத்தினை விட்டு, ஏகதேசத்தினை யறிவிப்பது எதுவோ, அது ஜகத்தஜகத் திலக்ஷணை (விட்டுவிடாதலக்ஷணை பாகத்தியாகலக்ஷணை) யென்று சொல்லப்படுகிறது. அஃது அவனே இத்துவிஜனென்பதுபோலவாம். இவ்விலக்ஷணையே ஈண்டுக் கொள்ளத்தக்கதாம். (௩௫)

அவனே இத்துவிஜன் என்னும் வாக்கியம் பரோக்ஷம் அபரோக்ஷம், அத்தேசம் இத்தேசம், அக்காலம் இக்காலம் என்பன முதலியவற்றை விட்டு, துவிஜன்மாத்திரத்தைக் குறிப்பிடுதற் றன்மையால் இரண்டு பதார்த்தங்களுக்கும் ஐக்கியத்தைக் கூறுகின்றது. (௩௬)

தத்துவமஸியென்னும் வாக்கியமும் தன்கணுள்ள பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத் தன்மைகளைவிட்டுச் சைதன்னிய சொரூபமாத்திரத்தினை இலக்ஷயித்து அஸிபதத்தால் தத் துவம் பதார்த்தங்களின் ஐக்கியத்தைச் சந்தேகமின்றி யறிவிக்கின்றது. (௩௭)

இவ்வாறு அறிவிக்கப்பட்ட அர்த்தத்தினைக் காட்டப் பட்ட ஒப்பற்ற மகாவாக்கியத்தால் யானென்று அபரோக்ஷம் செய்யத்தக்க அதிகாரிகளுக்குச் சோகநீங்கிய தன்மையை வேதம் அறிவிக்கின்றது. (இவ்வாறு வாக்கியார்த்த ஞானமுண்டாயின், அவித்தை நிவர்த்தியும் ஆநந்தப்பிராப்தியும் உண்டாகுமென்றவாறு.) (கஅ)

விதிவாக்கியங்களுக்குப் பெரும்பாலும் பிரவிருத்தியையுண்டுபண்ணுந் தன்மை உலக வாக்கியத்தினும் வேதவாக்கியத்தினும் காணப்படுகின்றது. சித்தித்த பொருளை (பிரமசொரூபமாகிய வஸ்துவை) அறிவிப்பதினால் தத்துவமஸியாதி வாக்கியங்களுக்கு இஃது (பிரவிருத்தியையுண்டாக்குந் தன்மை) எங்ஙனஞ் சம்பவிக்கும்? (சம்பவியாதென்பது சங்கை.) (கக)

விதியே பிரவிருத்தியையுண்டுபண்ணுகின்றதென்பதில்லை. * இராஜனாகின்றான், புத்திரனுண்டானானென்னும் ஞானத்தினாலும் உலகத்திற் பிரவிருத்தி யுண்டாகின்றதாகலின் விரும்பப்பட்ட பொருளினுணர்ச்சியும் பிரவிருத்தியையுண்டுபண்ணுவதாம். (உ0)

* இராஜனாகின்றானென்றறிந்தகாலத்து, இராஜனைத் தரிசித்தலாதி பிரவிருத்தி உலகத்தினர்க்கு இயல்பாயுண்டாகின்றது. பிரவிருத்திக்கும் வாக்கிய மில்லாதிருந்தும், புத்திரனுண்டாயினானென்னுமிடத்தும் ஜாதகர்ம முதலியவற்றிற் பிரவிருத்திக்கின்றார்கள். ஆதலால் விதி வாக்கியமே பிரவிருத்தியை யுண்டுபண்ணுவதெனல் இல்லையென்பது கருத்து.

ஆத்துமா ஐக்கியபரமான (தத்துவமஸியாதி) சுருதி வாக்கியங்களால் நிரந்தரம் பிரகாசிப்பதாயினும், அஃது ஆசிரியனது கிருபையின்றிய புருஷர்களால் (பண்டிதர்களாயினும்) சாக்ஷாத்கரிக்கக் கூடியதன்று. (சக)

காமிய நிஷித்த கர்மங்களை விட்டு நித்திய நைமித்திக கர்மானுஷ்டானஞ் செய்யும் நிர்மல அந்தக்கரணமுடைய அதிகாரி, தானே ஆத்தும சாக்ஷாத்கார முடையவனாகின்றான். ஆகையால், குருவினால் பிரயோஜந மென்னையென்று மதிக்கற்க. (சஉ)

தயாநிதியாகிய குருவின்றிக் கர்மங்களானே ஞானம் (ஆத்மசாக்ஷாத்காரம்) உண்டாவதில்லை. ஆசாரியனையுடைய புருஷன் அறிகின்றான் என்னும் பொருள் * வேதத்தாற் பெறப்படுதலின். (சங)

வேதம் அநாதியாதலாலேனும், பரமேசுவரனால் நிசுவாசம்போல் வெளிப்படுத்தப்பட்டமையாலேனும் பரமப் பிரமாணமாகின்றது. உபநிஷத் வாக்கியமின்றித் தன்னாலாவது பிறிதொன்றா (மற்றப் பிரமாணங்களா)லாவது ஆத்ம சாக்ஷாத்காரம் பெறப்படுவதில்லை. (சச)

எது வேறு பிரமாணங்களை யபேக்ஷிக்க வில்லையோ, எதனை யெல்லாப் பிரமாணங்களும் அபேக்ஷிக்கின்றனவோ

* "ஆசார்யவாந் புருஷோ வேத — ஆசாரியனையுடைய புருஷன் அறிகின்றான்" என்பது சாந்தோக்கிய சுருதி.

அவ்வேத வாக்கியம் பிரம * முதலிய அதீந்திரியப் பொருள்களை அறிதலிற் பிரமாணமாம். (சரு)

பிரமாணங்களையு மறிவிக்கும் ஞானத்தினை எந்த மந்தர்கள் பிரமாணத்தா லறிய விரும்புகின்றார்களோ, அந்த † மகாத்துமாக்கள் இந்தனங்களானே நெருப்பினை யெரிக்க (அதாவது எரிப்பதனை எரிக்கப்படுவதனால் எரியச் செய்ய) விரும்புகின்றவராவர். (சசா)

வேதம் அநாதி; இதனை வெளிப்படுத்தியவன் ஈசன். அவனால் வெளிப்பட்டமையை யுத்தேசித்து, இது (வேதம்) பூர்வாசாரியர்களால் பிரமாணமென்று சொல்லப்பட்டது. (சஎ)

உருவங்களைக் காண்டலில் நேத்திரங்களைவிட வேறு காரணம் காணப்படாததுபோல, அதிருஷ்ட உணர்ச்சியில் (அநுபவிக்கப்படாத ஆன்மவுணர்ச்சியிலாதல், சுவர்க்கமுதலியவற்றி னுணர்ச்சியிலாதல்) வேதத்தினைப்போல அறிவிக்கும் ஏது வேறின்று. (சஅ)

வேதங்களில் நிச்சயிக்கப்பட்ட அர்த்தத்தை ஆசிரியர் தந்தி (சாஸ்தி) ரங்களால் பிரகாசப்படுத்துகின்றனர். அங்ஙனம் பிரதிபாதிக்கப்பட்ட இவ்வநுவாதமாத்திரம் பிரமாணமாதல் அதற்குச் சித்திக்கின்றது. பிறிது யாதும் பிரமாணமாதலில்லை. (சகூ)

---

* முதலிய வென்னுஞ் சொல்லால் சுவர்க்க நரகமுதலியனவுங் கொள்ளப்படும்.

† ஈண்டு மகாத்துமாக்க ளென்றது பரிகாசவசனம்.

இரண்டு பாகங்களோடுகூடிய வேதத்தில் ஓரம்சம்(முதற்பாகம்) துவைதத்தை (கர்த்தா கருமம் பயன்முதலிய வடிவினதாகிய பேதத்தினை)ச் சாதிக்கின்றது; மற்றைய அம்சம் (உபநிஷத்துப் பாகம்) பிரசித்தமான அத்வைத வஸ்துவினையே (சகலபேதங்களுமின்றிய பிரம சொரூபத்தினையே) பிரதிபாதிக்கின்றது. (ருo)

அத்வைதமே சத்தியம்; அதன்கண் துவைதம் சத்தியமன்று; சுத்தியில் வெள்ளிபோலும், கானலில் நீர் தோன்றுதல்போலும் அத்தியஸ்தமாம் (கற்பிதமாம்). (ருக)

துவைத (அசத்திய) வஸ்துவில் அத்வைத வஸ்து அத்தியஸ்தமாகின்றதெனின், அதிற் பொருத்தமின்று (வஸ்து இன்மையால்); சத்தியத்தில் (வஸ்துவில்) அசத்தியங்களின் (அவஸ்துக்களின்) ஆரோபம் உண்டாகின்றது (அது வஸ்து வடிவமாயிருத்தலின்). (ருஉ)

இரண்டற்கும் ஆரோபங் கூறின், அவ்விரண்டற்கும் வேருக யாதும் இல்லை. சூனியத்தில் ஆரோபமுண்டாகாது. ஆதலால், அத்வைதத்திற்குச் சத்தியத்தன்மை கொள்ளற்பாற்று. (ருங)

பிரத்தியக்ஷ முதலியவற்ரு லறியப்படாத அத்வைதம் சுருதியால் பிரதிபாதிக்கப்படுவதாம். துவைதம் பிரதிபாதிக்கப்படுவ தன்று; அது இயல்பாகவே உலகத்தாரால் பிரதிபாதிக்கப்படுதலால். (ருச)

அத்வைதம் சுகவடிவினது; துவைதம் என்றுஞ் சகித்தற்கரிய துக்க வடிவினது. எதிற் பிரயோஜன முள்ளதோ அதனையே இச்சுருதி பிரதிபாதிக்கும். (ருரு)

வேதவாக்கியங்களினாலே எந்த ஆனந்தரூபமாகிய அத்வைத வஸ்து பிரதிபாதிக்கப் படுகின்றதோ, அதற்கு ஜீவத்தன்மை இயல்பாயுள்ள சொரூபமென்று சிலர் சொல்லுகின்றனர். (ருசா)

அந்த நிர்மல ஞான சொரூபத்திற்கு ஜீவத்தன்மையியல்பெனின், அக்கினியின் உஷ்ணப்பிரகாச சுபாவம் நீக்கப்படாதது போல, அதற்கு ஒருநாளும் அழிவுண்டாகலாகாது. (ருஎ)

எவ்வாறு அயம் இரசத்தோடு (பாதரசத்தோடாதல் ஓஷதிரசத்தோடாதல்)கூடிக் காஞ்சனத் தன்மையையடைகின்றதோ, அவ்வாறே ஜீவன் சாதன சக்தியால் பரத்தன்மையை அடைகின்றான் எனச் சிலர் கருதுகின்றனர் (சித்தாந்த வுணர்ச்சி யின்மையாற் சங்கிக்கின்றனர்). (ருஅ)

அந்த இம்மதம் பொருத்தமுடையதாகாது. சிலகாலத்தில் இரசவீரியம் நஷ்டமாகவே இரும்பிலேறிய பொன்னிறம் நாசத்தையடைகின்றது. (இரசசக்தியால் காஞ்சனத் தன்மையை யடைந்த இரும்பு மறுபடியும் தன் சொரூபத் தன்மையை யடைகின்றதென்பது பொருள்) (ருகூ)

அங்ஙனமே அநேகவித சுக துக்க லக்ஷணங்களோடு கூடிய இந்த ஜீவத்தன்மையும், சாதன சக்தியால் நீங்கியது போல் தோற்றுகின்றதேயன்றி நாசமடைகிறதில்லை. (சா0)

ஆதலால் இயல்பாகவே ஜீவனுகுமாயின், அது நிரந்தரம் ஜீவனேயாகும். இவ்வாறு பரமாத்மாவாயின் பரமாத்மாவே யாகுமென்பது சம்மதம். (சொரூபமாக இது பரமாத்மாவே; உபாதிவசத்தால் ஜீவத்தன்மையை யடைந்தது; உபாதி லயத்தில் பரமாத்ம சொரூபமே யாகின்றது.) (கூக)

அல்லது சீவன் (உபாசனை முதலிய) சாதன பலத்தால் பரமாத்மாவினுல் சமத்தன்மையை யடைகின்றதெனின், அதுவும் (சாரூப்பியமும்) சிலகாலத்தில் (சாதன சக்தி நசிக்குங் காலத்தில்) நசித்துவிடும் என்று எல்லாராலும் நிச்சயிக்கப்பட்டுளது (யாது ஆக்கப்பட்டதோ, அது அழிந்தேதீரும் என்பது பொருள்). (கூஉ)

ஆதலால் நீக்கற்கரியதையும், சம்பந்திகளையும், மோகத்தையும், மோகசொரூபமான சம்சாரத்தையும் தனது ஆத்மஞானத்தால் நீக்கிப் பூர்ணனும், எங்கு முள்ள ஆத்மசொரூபனுமாகிய தானே எஞ்சுகின்றான்; வேறொன்றும் எஞ்சுகிறதில்லை. (கூஙு)

அறியத்தக்கது சத்தியஞான அநந்த சொரூபமும் அத்வைதமுமான பரமாத்மரூபமுமாமென்று சகல ஸ்மிருதிகளுடன் எல்லா உபநிடதங்களும் பிரதிபாதிக்கின்றன. (கூச)

ஐக்கியத்தை அறிவிக்குஞ் சகல வேதவாக்கியங்களுக்கும் அங்கவடிவமாக மற்றெல்லா வாக்கியங்களுஞ் சொல்லப்படுகின்றன. (கூரு)

எது சூரியன்போலுதிக்கவே கர்த்திருத்தன்மை முதலியன இருள்போற் கெடுமோ, அத்தன்மைத்தாகிய பேத நீங்

கிய ஞானம் தத்துவமஸி முதலியவற்றினின்றும் * எங்ஙனம் உண்டாகும்? (கசு)

கர்மப் பிரகரணத்திலுள்ள ஞானம் (அக்கினிஹோத்திராதி) கர்மங்கட்கங்கமாமென்று பிராஞ்ஞர்களால் (மீமாம்ஸக பண்டிதர்களால்) அங்கீகரிக்கப்படுகின்றது; அது கூடாது. பின்னைப்பிரகரணத்திலுள்ள ஞானத்திற்குக் கர்மத்திற் கங்கமாந்தன்மை எங்ஙனஞ் சம்பவிக்கும்? (கஎ)

அதிகாரி விஷயபேதங்களையுடைய கர்ம ஞான வடிவமான இரண்டு காண்டங்களுள. உளவாகவே (அதிகாரிவிஷய பேதமிருத்தலான்) ஞான கர்மங்களிரண்டற்கும் ஒன்றற்கொன்று அங்காங்கித்தன்மை எங்ஙனம் நிகழும்? (நிகழாதென்பது பொருள்.) (கஅ)

ஞானம் கர்மப் பிரகரணத்திற் சம்பவியாது; அங்ஙனமே இக்கர்மமும் ஞானப் பிரகரணத்திற் சம்பவியாது. ஆகவே,

* இவ்வினா அபேதஞானம் ஜந்யமன்று நித்தியப் பிராப்தமாமென்பதை யுணர்த்த வந்ததேயாம். அங்ஙனமின்றிப் போதகத்தன்மை முதலிய பேதத்தோடு கூடிய காலத்து நிகழும் தத்துவமஸி மகாவாக்கிய உபதேசத்தாற் பேதநீங்கிய (அபேத) ஞானமுண்டாகாதேனும் மறுதலையாயின், அஃது 'இரஜ்ஜுவஞ்ஞான காலத்துண்டாகிய சர்ப்ப ஞானத்தின் நீக்கம் அச் சர்ப்பஞானகாலத்து உபதேசத்தால் உண்டாகுமேயன்றி, அச்சர்ப்பஞானமொழிந்த இரஜ்ஜுஞான காலத்துபதேசத்தாலுண்டாகாது; சமானசத்தையுள்ளனவே தம்மிற்சாதக பாதகமாமென்னு நியாயத்தான். அங்ஙனமே பேதஞான காலத்துண்டாகு முபதேசத்தான் பேத நீக்கத்தின் ஞான முண்டாகுமேயன்றி, அப்பேதஞான மொழிந்த அபேதஞான காலத் துபதேசத்தாலுண்டாகாது' என்றல் முதலியவற்றால் மறுக்கப்படுமாறு காண்க.

சூரியனுக்கும் இருளுக்கும்போல் எங்ஙனம் இவ்விரண்டற்கும் சமுச்சயம் (கலப்பு) உண்டாகும்? (சுகூ)

ஆதலால் மிக அழுத்தமான இருளைக் கெடுப்பதில் சூரியன் உதவியை விரும்பாததுபோல ஞானம் மோகத்தை நிவர்த்திப்பதில் வேறுதவியை விரும்புவதில்லை. (எ0)

அந்த (சர்வாநுபவ சித்தமாகிய) ஜகத்திற்குச் சாக்ஷியெதுவோ, அது ஞானமாம். அந்த ஞானரூப ஆத்மாவாகிய சாக்ஷி அந்த (அவித்தையாற் கற்பிக்கப்பட்ட) தர்மங்களால் சம்பந்திக்கப்படுகிற தில்லை. ஆதலால் சச்சிதானந்த ரூபம் அச்சாக்ஷியே (தர்மியன்று). (எக)

இராஜ்ஜு முதலியவற்றிற்குப் பாம்புமுதலியவற்றோடுண்டாகுஞ் சம்பந்தம் திருசிய மாவதுபோல, ஆத்மாவுக்குக் கர்த்திருத்வாதிகளோடுள்ள சம்பந்தம் திருசிய சம்பந்தமாம். 'என்றும் இவ்வான்மா அசங்கமா' மென்று (பிரகதாரணிய) சுருதியும் இவ்வர்த்தத்தினையே சாதிக்கின்றது. ()

கர்த்திருத்தன்மையும் கருமத்தன்மையும் எதற்கு விளங்குகின்றனவோ அது பிரமமே (கர்த்திருகர்மவிளக்க வடிவாயிருத்தலின்). கர்த்தா அல்லது கர்மம் பிரமத்தை யறியாது (தானின்மையால்). எதற்குக் கர்த்தாவும் கர்மமும் இல்லையோ, அந்தப் பிரமவடிவமான இவ்வாத்மாவே தெளிவாய் அறிய ஆரம்பிக்கப்படுகின்றது. (எங)

கர்த்திருத்துவ முதலிய யாவும் இம் மாயா சக்தியால் ஆத்மாவினிடத்துத் தோற்றுகின்றனவென்று சிலர் கூறுகி

ன்றனர். அவர்களுக்கு இக்கற்பனை வடிவமான பிராந்தி எங்ஙனமுண்டாயிற்று? பிரமத்திற் கந்நியமாகப் பிறிதொன்று மில்லை; ('ஒரே அத்துவிதீயப் பிரமமுளது; ஈண்டு நானாவென்பது சிறிதுமில்லை' என்னும் இவை முதலிய சுருதியான்.) (எச)

காரணமாகிய மண் அறியப்படுங்கால் காரியமாகிய குடம் கரகமுதலியன அறியப்படுமாறுபோல அந்தப் (சுருதியிற் பிரதிபாதிக்கப்பட்ட) பிரமம் அறியப்படின், சகல பிரபஞ்சமும் அறியப்பட்டதாகும். (எரு)

விசேஷ மின்றியதும், பரிசுத்த முள்ள சைதன்னிய சுபாவமுமான அந்தப் பிரமம் ஒன்றே காரியவடிவான பிரபஞ்சத்திற்குக் காரணமாம். ஆதலால் சத்தியமும், ஏக ரூபமும், மாயையினை யுபாதியாக வுடையதுமான பிரமத்தினின்றும் இவ்வெல்லாம் (இது வென்னும் வடிவாய் அநுபவிக்கப்படும் பிரபஞ்சம்) உண்டாயின. (அந்நிய வாதிகளாற் கற்பிக்கப்படும் பிரதான முதலியன காரணமாகாவென்பது பொருள்.) (எசு)

காரணம் அசத்தென்று சிலர் கூறுகின்றனர். அசத்திற்குக் காரணத்தன்மை யுண்டாகாது. முளையை யுண்டாக்குஞ் சக்தி, சத்து ரூபமான வித்திருக்கின் எல்லாராலும் செவ்வையாய்ப் பார்க்கப்படும். (இல்லாத வித்தின்கண் அறியப்படாதென்பது பொருள்.) (எஎ)

ஜகத்திற்கு அசத்து காரணமென்று கூறி, வாதியானவன் வந்தியாபுத்திரனால் (புத்திரனை யுண்டுபண்ணும் வடிவி

னதாகிய) காரியத்தைச் சாதிப்பானாக; அன்றியும் கானல் நீரைப் பருகிப் பெருந்தாகத்தைத் தணித்துக்கொள்வானாக. (வந்தியாபுத்திரனும் கானல் நீரும் இன்மையால், அவற்றின் காரியமு மில்லையென்பது பொருள்.) (௭௮)

எதனால் முற்கூறிய அசத்துவாதம் * சாஸ்திரயுக்திகளால் சம்பவிக்கவில்லையோ, அதனால் சத்து சொரூபமாகிய பிரமமே சகல ஜகத்திற்குங் காரணமாகின்றது. (௭௯)

பிரபஞ்ச வடிவமாகவும் பிரமமே பிரசித்தியை யடைகின்றது. குரு சிஷ்ய வடிவமாகவும் அங்ஙனமே பிரமா முதலிய வடிவாகவும் (இரணிய கர்ப்பன் முதலிய தேவதை வடிவாகவும்) இந்தப் பராற்பரமாகிய பிரம சொரூபமானது தோற்றுகின்றது. (அவ்வவ் வடிவமாகப் பிரமமே விவர்த்தரூபமாய் விளங்குகின்றதென்பதுபொருள்.) (௮0)

சத்தியம் ஜகத்தென்னும் ஞானம் அபக்குவ சித்தமுடைய (அத்வைத பாவனை யில்லாத) வர்களுக்குச் சனன மரண பரம்பரையின்பொருட்டு உண்டாகின்றது. ஆதலால் இவ்வெல்லா ஜகத்தும் அசத்தியமாமென்று உபநிடதங்கள் பிரதிபாதிக்கின்றன. (௮௧)

பக்குவ மனதை (சிரவணமனனாதிகளால் நிலைத்த பிரஞ்ஞையை)யுடைய புருஷ சிரேஷ்டர்களுக்கு அவர்களது

---

* "ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீத் - சௌமியனே! இது முன் சத்தாகவே யிருந்தது" என்பது சுருதி. வந்தியாபுத்திரன் முதலியவற்றினின்றும் காரிய முண்டாகாமை யுக்தி.

பழமையான புண்ணியங்களான் இஃது (வேதம்) * இவ்வெல்லாஜகத்தும் பிரமமேயென்று பலமுறை யறிவிக்கின்றது.()

பொன்னென்னும் உணர்ச்சியின்றியவர்கட்குப் பொன்னாலாகிய பூஷணத்திலுள்ளது பூஷணமென்னும் புத்தியே. (பொன்னின் வேறன்றாயினும் பொன்னென்னும் புத்தியின்று.) அதுபோல, அவிவேகிகளுக்கு (தத்துவ வுணர்ச்சியில்லாதவர்கட்கு) இவ்வெல்லாம் பிரமமே யென்னும் உண்மையுணர்வின்று. (அங.)

யானென்னு முணர்வான் எல்லாரிடத்தும் பிரசித்தமாயுள்ள இப் பிரமம் எவனுக்குப் பரோக்ஷமாகும்? (ஒருவனுக்கு மாகாது). அதுவும் (அபரோக்ஷமாயிருப்பதும்) சுருதி விசாரமின்றிய மூடர்களான் சாக்ஷாத்கரிக்கக் கூடியதன்று. (அச)

யான் இதுவென்னும் புத்திகளால் சகல ஜனங்களும் எப்போதும் வியவகரிக்கின்றார்கள். அவற்றுள், முன்னது பிரத்தியகாத்மாவினிடத்தும் பின்னது சரீரம் இந்திரியம் முதலிய புறப்பொருளிலும் வசிக்கின்றது. (அரு)

யானென்னும் புத்தி சரீரேந்திரியாதி விஷயங்களை விஷயிப்பதாயின், இது பெரும் பிராந்தியே; அஃதல்லாத தன்கண் உண்டாகும் அஃதென்னும் புத்தி அத்தியாசமாக விதிக்கப்படுதலான். (அசு)

---

* “ஸர்வம் ஖ல்விதம் ப்ரஹ்ம” - நிச்சயமாக இவ்வெல்லாம் (ஜகத்து) பிரமம்” என்பது சுருதி.

ஆதலால் எல்லாவற்றிற்கும் சாக்ஷியாகிய பரமாத்மாவே யானென்னும் பிரத்தியயத்திற்குப் பொருளென்பது உசிதம். ஜடமாயினும், இவ்வகங்காரம் சத்தின் சம்பந்தத்தால் சேதனம்போலாகின்றது. (அஎ)

ஆதலால் சகல சரீரங்களிலும் எந்தப் பிரத்தியயம் கேவலம் யான் யானென்றே ஸ்பஷ்டமாய்க் காணப்படுகின்றதோ, அதற்கு முக்கியார்த்தம் பிரமமே யாகின்றது. (அஅ)

கோவென்னுஞ் சொல்லால் கோத்தன்மைச் சாதி காணப்படுவதுபோல, அதன் வியக்தியும் அர்த்தத்தன்மையாற் காணப்படுகின்றது. அவ்வாறே யானென்னுஞ் சொல்லின் பொருளாகிய பரமாத்மா பிராந்தியினுல் அகங்காரமாகின்றது. (அகூ)

அக்கினியின் சேர்க்கையால் இரும்பிற்குத் தகிக்கப்படுந் தன்மை முதலியன தோற்றுவதுபோல அகங்காரத்தினும் சேதனசம்பந்தத்தால் யான் என்று கர்த்திருத்தன்மை முதலியன தோற்றுகின்றன (அத்தியாசத்தால்). (கூ0)

தேகேந்திரியங்களுக்கு வேருனதும், நிர்மலமும், இணையற்றதும், அத்வைதமுமாகிய பிரமமே யான்என்னும் பிரத்தியயத்தின் பொருளாமென்றறிந்து அதற்கு வேருக ஒன்றனையுங் கற்பிக்கலாகாது. (கூக)

எவ்வாறு அவயவ பேதத்தால் சரீரத்தில் சுக துக்கங்கள் அநேகமாகின்றனவோ, அங்ஙனமே ஈண்டு (சம்சாரத்தில்) அபேதமிருக்கினும் இவ்வாத்மாவிற்கு அநுபவ வை

சித்திரியம் (சத்து அசத்து சதசத்து, பின்னம் அபின்னம் பின்னாபின்னம் என்னுமிவை முதலிய அநுபவவேற்றுமை) உண்டாகின்றது. (கஉ)

இந்தப் பிரபஞ்சம் யாது? இதன் வடிவம்யாது? இஃது எங்ஙனம் உண்டாயிற்று? இதற்குக் காரணம் யாது? என்று இவ்வாறு ஒருபோதும் சிந்திக்கலாகாது. ஜகத்து மாயாமாத்திரமாமென்று புத்திமான்களால் சிந்திக்கத்தக்கதாம். (க௩)

‡ மரத்தின் விகாரமாகிய யானையின்கண் மரமானது மறைகின்றது. அதுவும் (யானையும்) அதன் (மரத்தின்) கண்ணே மறைகின்றது. அங்ஙனமே ஜகத்திற் பரமாத்மாவும் பரமாத்மாவிற் சகமும் மறைகின்றன. (க௪)

* ஆத்மமயமாகிய பெரிய படத்தில் நாநாவித ஜகச்சித்திரம் ஆத்மாவினால் (தனதிச்சையாகிய தூரியால்) எழுதப்பட்டுளது. அச்சித்திரத்தைக் கேவலம் தானே பார்த்துப் பரமாத்மா ஆநந்தத்தை யடைகின்றார். (க௫)

‡ "மரத்தை மறைத்தது மாமதயானை, மரத்தின் மறைந்தது மாமத யானை, பரத்தை மறைத்தது பார்முதற் பூதம், பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்" என்னுந் திருமந்திரச் செய்யுளின் பொருளுமிதுவே.

* அங்ஙனமே, "ஜகச்சித்ரம் ஸ்வாத்மபித்தௌ ஸ்வேச்சாதூலிகயா லிகிதம் | ஸ்வயமேவ ஸ்வாவலோக்ய ப்ரீணாதி பகவான் சிவ: || பகவானாகிய சிவன் தன்னிடத்துத் தனதிச்சையாகிய தூரியினால் ஜகத்தாகிய சித்திரத்தை எழுதித் தானேபார்த்துச் சந்தோஷிக்கின்றார்." என்று யோகிகளினிருதயமென்பதில் கூறப்பட்டிருக்கின்றது

சின்மாத்திரமும், அமலமும், அக்ஷயமும், அத்துவய மும், ஆநந்தமும், அநுபவத்தா னறியப்படுவதுமாகிய பிரம மேயுள்ளது; அதனின் வேருனது சிறிதும் இல்லையென்பது * ஞானிகளின் நிச்சயம் (சித்தாந்தம்). (கூகூ)

வித்தை அவித்தை யென்னும் இவ்வேத பரிபாஷை வியவகார தசையின்பொருட்டாம்; தத்துவதிருஷ்டியாகவோ இல்லை. யதார்த்த சொரூபம் பிரமமே. இதற் கந்நியமான தில்லை. (கூஎ)

பிரமத்தின் வேருனது இருக்கின்றதென்னும் மத முளதேல், அதுவும் (வேருனதும்) இருக்கின்ற தென்னுந் தன்மை வடிவினதாகிய பிரமமேயாகின்றது. இருக்கின்ற தென்னுந் தன்மையின் வேருன துளதேல், அது இல்லையெ ன்னுந் தன்மையான் சூனியமென்றே பெறப்படுகின்றது. ()

தத்துவ ஞான சக்தியால் ஸ்திரத்தன்மையாக (விக்ஷே பாதிக ளின்றிய தன்மையாக) வாதிக்கப்பட்ட தாயினும், அந்த (உலகப் பிரசித்த சரீர வியவகார வடிவினதாகிய) மாயை உடல் நீங்குமளவும் இந்த ஞானிகளுக்கு மித்தியாத் தன்மையாகத் தோன்றுகின்றது. ஆத்துமாவும் சுவ (அத்வ யாநந்த சத்திய) சொரூபமாகப் பிரகாசிக்கின்றது. (கூகூ)

---

* இஃது, "எப்போதாவது வியவகாரத்தில் துவைதத்தைப் பார்க்கின், சித்தின் அந்நுவயத்தால் ஞாநாத்மாவிற்கு வேருகக் காண்ப தில்லை. ஆனல், திக்குப் பிரமை, இரட்டைச் சந்திரன் என்பவற் றைப்போல மித்தையாகவே காண்கின்ருன்." என்று வார்த்திக காரரால் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஞானிகளுக்கு இதுவே விசேஷம். பிரபஞ்ச மாகிய சம்சாரத்தைப் பார்க்கின்றவர்களாயினும், சத்துக்கள் ஆத்மாவிற்கு வேறாக ஒன்றனையுங் காணார். சகல உபநிடதவாக்கியங்களாலும் நிச்சயிக்கப்பட்டதாயிருத்தலின், தனது ஆத்மாவிற்கு வேறாக ஒன்றனையும் பாவிக்கிறதில்லை. (க00)

எல்லாம் பிரமமென்று அறிகின்ற ஞானிகளுக்குச் சிந்திக்கத் தக்கது யாது? சிந்திக்கத் தகாதது யாது? சொல்லத் தக்கது யாது? சொல்லத் தகாதது யாது? செய்யத் தக்கது யாது? செய்யத் தகாதது யாது? ஒன்றுமில்லை. (க0க)

எல்லாத் திரிசிய விசேஷங்களையுந் திருக்கு ரூபமாகப் பார்க்கின்ற ஞானிகட்குப் பந்தமுமில்லை, மோக்ஷமுமில்லை, பரமாத்மத் தன்மையுமில்லை, ஜீவத்தன்மையுமில்லை. (க0உ)

அடிக்கடி சிந்திக்கப்படுவனவும், அறிவிக்கப்பட்ட நிஜவுபதேச முடையனவும், எல்லாப் பிரமாணங்களுக்கும் எல்லையுமாகிய சகல வேதங்களுக்கும் இதுவே (ஆத்ம ஏகத்துவமே) பிராமாணியமான * நிகமனமாம். (சகல வேதாந்தங்களின் சித்தாந்தங்களு மிதுவேயென்பது பொருள்.) (க0௩)

---

* ஜீவன் பரமாத்மாவின் அபின்னம் என்பது பிரதிஞ்ஞை; சச்சிதானந்த முடைமையான் என்பது ஏது; எது பரமாத்மாவின் அபின்னமாகாதோ அது சச்சிதானந்த லக்ஷணமுடைய தாகாது; குடம் போல என்பது திருஷ்டாந்தம்; இச்சீவன் சச்சிதானந்த லக்ஷணமுடைய தாகாத தன்று என்பது உபநயம்; ஆதலால் ஜீவன் பரமாத்மாவின் அபின்ன மாகாததன்று என்பது நிகமனம்.

இவ்வாறு குருவினால் உபதேசிக்கப்பட்ட சிஷ்யன் சந்தோஷமுடையவனாய் அவரைப் பலதரம் நமஸ்கரித்துத் தனதநுபவத்தாற் சித்தித்த அர்த்தத்தைத் தானே உள்ளில் விசாரித்தான். (௧௦௪)

யான் அஜரன் (மூப்பில்லாதவன்); யான் அக்ஷரன் (அழிவில்லாதவன்); யான் பிராஞ்ஞன் (ஈசுவரன்); யான் பிரத்யகாத்மபோதன்; யான் பரமாநந்தமயன்; யான் பரமசிவன்; யான் பரிபூரணன். (௧௦௫)

ஆத்ம ஞானிகளுள் சம்பத்துடையவன் யான்; ஆத்மாநந்தாநுபூதி ரசத்தை யுணர்ந்தவன் யான்; பாலன் இடையன் வரையுள்ள எல்லாராலும் யானென் றனுபவிக்கப்படும் பெருமையுடையவன் யானே. (௧௦௬)

இந்திரிய சுகத்தினின்றுந் திரும்பியவன் யான்; ஆத்ம சுக ஞானானுபூதியால் நிரம்பியவன் யான்; இத்தன்மையது ஆத்மா என்னும் புத்திக்கு மிகத் தூரமாயுள்ளவன் யான்; விஷய சுகத்திற்கு வேறாகிய சுகத்தையடைந்த சித்தமுடையவன் யானே. (௧௦௭)

ஈசர்களுக்கு ஈசன் யான்; இராகத் துவேஷ சம்பந்தமில்லாதவன் யான்; ஆத்ம சொரூபத்தைக் காண்டல் வடிவமான விஷயத்தில்புத்தியுள்ளவர்களுள்விரும்பப்படும்கடைசிப் புருஷார்த்தத்தைச் சாதித்தற் றொழி லுடையோன் யானே. (௧௦௮)

ஜகத்திற்கு (உற்பத்திலயங்க ளுடையதற்கு) உதயம் (பிரகாசம்) யான்; உபநிடதமாகிய உத்தியானத்தில் திரிய

வன் (அதன் அர்த்தத்தைப் பரிசீலனஞ் செய்பவன்) யான்; மிகுந்த சோகமாகிய சாகரத்திற்கு வடவை நெருப்பு யானே.

அத்தியந்த தேஜோமயமான தனது விபூதிகளால் மேலும் கீழும் குறுக்குமாக வியாபித்தவன் யான்; தர்க்க விதர்க்கங்களாலாகிய விசாரத்தால் அங்கீகரிக்கப்பட்டவன்போற் றோற்றுகின்றவன் யானே. (கக0)

இருடி யான்; இருடி கணம் யான்; சிருஷ்டி யான்; சிருஷ்டிக்கப்படுவது யான்; செல்வம் யான்; பெருக்கு யான்; திருப்தி யான்; திருப்தி தீபத்தின் சுடர் யானே. (ககக)

ஏகன் யான்; இஃது இத்தன்மையது, இவ்வளவினது என்றெண்ணும் பேதமில்லாதவன் யான்; நிராசையுள்ளவர்களால் யஜிக்கத்தக்கவன் யான்; உள்ளத்தில் யான் புண்ணியாத்மா வென்னும் அநுபவமில்லாதவனும் யானே. (ககஉ)

ஐக்கியத்தை விளக்குவோன் யான்; வாக்கியத்தா லுண்டாகும் பிரமசுபாவ ஞானத்தால் பரிசுத்தமான மதியுடையோர்க்கு இறைவன் யான்; இரவின் இருள்போன்ற மோக (அஞ்ஞான) த்திற்குச் சூரியன் யானே. (ககங)

ஒடதிகளுக்கு வீரியம் யான்; குறுக்கு நெடுக்காயுள்ள புவனம் யான்; ஓங்காரமாகிய கமலத்தில் விளங்கும் ஆத்மசுகமாகிய வாசனையால் மதர்த்த வண்டு (மறைக்கப்பட்ட அகங்காரம்) யானே. (ககச)

அசுபங்களுக்கு ஔஷதம் யான்; உபாதியினாலாகிய பிரபஞ்சலக்ஷண தர்மக்கூட்டங்களில்லாதவன் யான்; சித்த

த்தாற் கற்பிக்கப்படும் பல்வகையான தர்மாதி நான்கு புருஷார்த்தங்களையும் சாதிக்குந் தன்மையுடையோன் யானே. ()

யான் பெரியனென்னு மேன்மையால் மதர்த்த பெரிய யானை போன்றவர்களுக்கு அங்குசம் யான்; ஆகாயம்போல் பலமில்லாதவன் யான்; மன்மதனைப்போல் ஆக்கப்படு விகாரங்களில்லாதவன் யானே. (கககூ)

ஆத்மாவினிடத்துச் சம்சய புத்தி யுடையவர்களுக்குச் சலனமில்லாத (நிச்சயமான) வுபதேசத்தால் அறிவிக்கின்றவன் யான்; நிலையில்லாத சுகத்தினின்றுந் திரும்பியவன் யான்; நிலையுள்ள சுகவடிவமான ஞான சம்பந்தத்திற்குரியவன் யானே. (ககஎ)

கருணை ரசத்தால் நிரம்பியவன் யான்; வியாபிக்கப்பட்ட கமலாசனன் (பிரமா) முதலியோர் உலகம் யான்; மலினமான அகங்கார முதலியவை யில்லாதவன் யான்; புண்ணிய பாவ சம்பந்த மில்லாதவன் யானே. (ககஅ)

இந்திரியங்களுக்கு எட்டாதவன் யான்; ஆகாயாதிகளுக் கப்பாற்பட்டவன் யான்; ஆகாயத்தாமரை வடிவினதாகிய சம்சாரத்திலுள்ள அற்பர்களாலடைதற்கரியன் யான்; கண்டஞானத்வைத நீக்குதற் றொழிலுடையோன் யானே. (ககக)

துவைத நீங்கியதாகச் சொல்லப்படுபவன் யான்; தேகி யான்; ஆகின்றவை யெல்லாவற்றிற்குங் காரணபூதமான இருதயம் யான்; பலத்தில் ஆசையில்லாதவர்களா லடையப் படுபவன் யான்; போக்குவரவில்லாத பூரணபோதன் யானே.

மிக வழுத்தமான மோகமென்னும் இருளின் நிறைவை நாசஞ்செய்யும் சூரியகிரணம் யான்; நாழிகை, பகல், இரவு வருஷம், யுகம், கற்பமென்னும் காலபேதங்கள் யானே. ()

ஸ்தாவர சங்கம சொரூபன் யான்; தேர்ந்த புத்திமான்களாற் புகழப்படும் ஒழுக்கமுடையவன் யான்; விஷயப் பற்றுள்ள ஜனங்களா லடைதற்கரியவன் யான்; நிலையில்லாச் சம்சார சாகரத்தின் கரை (பிரமம்) யானே. (கஉஉ)

வேதமாகிய சமுத்திரத்தில் மறைந்துள்ள ஞான சுகத்திறற் றோன்றிய களிப்பால் சந்தோஷமுடையவன் யான்; * சலமென்னும் பதத்தில் பிரவேசித்த புத்தியினை யுடையோர்க்கு அறியப்படாதவன் யான்; சாந்தியென்னும் மார்க்கத்தா லறியப்படுபவன் யானே. (கஉங)

பிரமா முதலியோரால் விஷயிக்கப்படும் பஞ்சமகா பூதங்களுக்குக் காரண சொரூபன் யான்; ஜகத்திற்கு ஆநந்தத்தை யுண்டுபண்ணுவோன் யான்; பிறப்பு, மூப்பு, நோய், இறப்பு என்பவைகளில்லாதவன் யானே. (கஉச)

உங்காரம் (வெண்கலத்தாள முதலியவற்றின் தொனி), ஹுங்காரம் (யுத்தத்திலுண்டாகும் வீரத்தொனி), சிஞ்சிதம்

---

* சலம் என்பது தனது வெற்றியின்பொருட்டு வேறு விதமான பொருளைக் கற்பித்தல். அது நவ கம்பளமுடையவன் பிராமணன் என்னும் இவ்வாக்கியத்திற்குப் புதிய கம்பளமுடையவன் பிராமணன் என்னுஞ் சொல்லுவானது கருத்துக் கியைந்த பொருட்கு மாறாக ஒன்பது கம்பளமுடையவன் பிராமணன் என்று பொருள் கொள்ளல் போலும்.

(கிண்கிணியோசை), பிளிறல் (யானைச் சத்தம்) என்னும் முக்கியமான பல்வகை நாதபேதங்கள் யான்; விரைவில் நிகழ்ந்த ஆத்மஞான தீபத்தால் விளக்கப்பட்ட இருதயபவனம் யானே. (பவனம் - வீடு.) (க௨௫)

ஞானம் யான்; ஞேயம் யான்; ஞாதா யான்; ஞாதிரு ஞானம் (அறிபவன் அறிவு) இல்லாத இருத்தற் றன்மை மாத்திரம் யானே. (க௨௬)

தத்துவங்கட் கப்பாற்பட்ட பதம் யான்; தத்துவங்களி னுள் யானுளன் என்னும் அபிப்பிராய மில்லாதவன் யான்; தாமத விருத்திகளால் அறிதற் கரியவன் யான்; தத்துவம் பதங்களின் ஞானத்தால் அறிவிக்கப்படு மந்தக்கரணமுள்ள வன் யானே. (க௨௭)

தேவர், தைத்தியர், நிசாசரர், மனிதர், திரியக்கு, மகீதரம் (மலை) முதலியன யான்; தேகேந்திரியாதிகள் இல்லாதவன் யான்; தெற்கு, கிழக்கு முதலிய திக்குகளின் பகுப்பு யானே. (க௨௮)

தர்மாதர்ம மயன் யான்; தர்மாதர்ம முதலிய பந்தமில் லாதவன் யான்; தருமசீலர்களுக்கு எளியன் யான்; தன்னியன் யான்; பிரமாவிற்குக் காரணன் யானே. (க௨௯)

பெயர் முதலியவைக ளில்லாதவன் யான்; நரகம் சுவர்க்கம் முதலியவைக ளில்லாதவன் யான்; நாதத்தினு லறியப் படுபவன் யான்; பல்வகைச் சத்தத்திற்கும் சகல வேதங்கட்குஞ் சாரம் யானே. (க௩0)

ஈச சீவ பேதத்தை வாதிக்கும் பரமார்த்த ஞானத்தால் சுத்தமான சித்தமுடையவன் யான்; * பிரகிருதி யான்; விகிருதி யான்; பகுக்கப்படுபவைகளின் பரிணமம் யானே.()

பணதர (பாம்பு) பூதர (மலை) சாரணர்களது விக்கிரகங்களால் தாங்கப்பட்ட பிரபஞ்சத்தின் சாரம் யான்; (சிவனது) நெற்றியிலுள்ள சிவந்த கண்ணினாற் றொல்வியடைந்த பஞ்சபாணன் (மன்மதன்) யானே. (௧௩௨)

யான் † (பாசத்தால்) கட்டுப்பட்டவனல்லன்; அங்ஙனமே யான் முக்தனு மல்லன்; யான் அறியப்படுபவனு மல்லன்; யான் விருத்திஞானமு மல்லன்; யான் அறிவிப்பவனு மல்லன். (௧௩௩)

பக்தி (பகவதாகாரவிருத்தி) யான்; பஜனம் (அருச்சனையாதிகளா லுபாசித்தல்) யான்; முக்தி யுக்தி (அனர்த்த நிவர்த்தி ஆனந்தப்பிராப்தியின் உபாயம்) யான்; சகல பூதங்களு

---

* பிரகிருதி யென்பது மூலப்பிரகிருதி. மகதத்துவம், அகங்கார தத்துவம், பஞ்சதன்மாத்திரை என்னும் இவ்வேழும் விகிருதிகளெனப்படும்.

† எண்டுப் பாசமென்றது "க்ருணா லஜ்ஜா பயம் ஸங்கா ஜுகுப்ஸா சேதி பஞ்சமீ| குலம் ஸீலம் ததா ஜாதி ரஷ்டௌ பாஸா: ப்ரகீர்த்திதா: || பாஸபத்தஸ் ததா ஜீவ: பாஸமுக்த: ஸதாஸிவ:| இரக்கம், நாணம், பயம், சங்கை, நிந்தை யென்னும் ஐந்தும், குலம், சீலம், ஜாதி என்னும் மூன்றும் ஆக எட்டும் பாசங்களெனப்படுகின்றன. பாசத்தாற் கட்டுண்டவன் ஜீவனெனப் படுகின்றான்; பாசமுக்தன் சதாசிவன் ஆகின்றான்." என்று தந்திரத்திற் கூறிய எட்டுப் பாசங்களுமேயாம்.

க்கும் சிக்ஷகன் (கற்பிப்பவன்) யான்; ஆக்கப்பட்டனவும், ஆகின்றனவும், ஆவனவுமாகிய பிரபஞ்சத்திற்குக் காரணன் யானே. (௧௩௪)

மகத்துக்களால் மதிக்கப்படுபவன் யான்; மந்த மதியினரால் மதிக்கத் தகாதவன் யான்; மதம், இராகம், மானம் என்பவற்றால் மோகிக்கப்பட்ட மனதின் துர்வாசனையால் அடைதற்கரியவன் யானே. (௧௩௫)

யாகஞ் செய்தல், யாகஞ் செய்வோன், யாகஞ் செய்துவைப்போன், யாகமென்னும் வடிவினன் யான்; இயமமுதலியவைக ளில்லாதவன் யான்; இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் திக்குப்பாலகர் வடிவினன் யானே. (௧௩௬)

ஜகரக்ஷணையைச் செய்யவேண்டுமென்றலைச் சிக்ஷித்தலாகிய பார்க்கப்படும் விநோதப்பார்வையினது மகிமையான்; இரவும் பகலு மில்லாவிடத்து விளங்கும் அநுபவப் பிரமாணத்தாற் பெறப்படுபவன் யானே. (௧௩௭)

இலக்ஷண லக்ஷிய மயன் யான்; இலாக்ஷணிகன் (இலக்ஷணையா லறியப்படும் பொருள்) யான்; இலய முதலியவையில்லாதவன் யான்; இலாபாலாப மயன் யான்; அடையப்படுபவற்றுள் அடையப்படாதவன் யானே. (௧௩௮)

வர்ணாசிரமம் இல்லாதவன் யான்; வர்ணமயன் யான் சிரேஷ்டமானவர்களுள் கணிக்கப்படுபவன் யான்; மனத்திற்கு எட்டாதவன் யான்; வாக்கியங்களின் அர்த்தத்திலும் பதத்திலும் பிரவேசித்துள்ளவன் யானே. (௧௩௯)

சமதமமில்லாத மனதுடையவர்களுக்கு நூற்றுக்கணக்கான சாஸ்திரங்களாலும் அறியப்படாதவன் யான்; ஞானிகளுக்கும் புகலிடம் யான்; கெடுக்கப்பட்ட பல்வகைச் சம்சயக்கூட்டங்கள் யானே. (௧௪௰)

(பிறத்தல் இருத்தல் முதலிய) ஷட்பாவ விகாரமில்லாதவன் யான்; (மதுராதி) ஷட்குண மில்லாதவன் யான்; * ஷட்கோசமில்லாதவன் யான்; முப்பத்தாறு தத்துவக்கூட்டங்களில்லாதவன் யானே. (௧௪௧)

ஞானாநந்தமயன் யான்; சமாதி சங்கற்பங்களின் கற்பக விருக்ஷம் யான்; சம்சாரமில்லாதவன் யான்; ஆத்தும வித்தையின் சாக்ஷாத்காரம் யானே. (௧௪௨)

ஹவ்வியம் (தேவர்கட்குரிய திரவியம்) யான்; கவ்வியம் (பிதிர்கட்குரிய திரவியம்) யான்; கொள்ளுதற் றள்ளு

---

* ஷட்கோசங்களாவன:—'𑌪𑌿𑌤𑍃𑌭𑍍𑌯𑌾𑌮𑌶𑌿𑌤𑌾𑌦𑌨𑍍𑌨𑌾𑌤𑍍 𑌷𑌟𑍍𑌕𑍋𑌶𑌂 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌵𑌪𑍁𑌃 | 𑌸𑍍𑌨𑌾𑌯𑌵𑍋𑌽𑌸𑍍𑌥𑍀𑌨𑌿 𑌮𑌜𑍍𑌜𑌾 𑌚 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌪𑌿𑌤𑍃𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 | 𑌤𑍍𑌵𑌙𑍍𑌮𑌾𑌂𑌸𑌶𑍋𑌣𑌿𑌤𑌮𑌿𑌤𑌿 𑌮𑌾𑌤𑍃𑌤𑌶𑍍𑌚 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌹𑌿 || மாதா பிதாக்களால் உண்ணப்பட்ட அன்னத்தால் ஆறுகோசமான சரீரமுண்டாகின்றது. பிதாவினின்றும் நாடி, எலும்பு, மச்சையென்பவை யுண்டாகின்றன. அங்ஙனமே மாதாவினின்றுந் தோல், மாமிசம், இரக்தமென்பவை யுண்டாகின்றன.'' என்று சிவகீதையிற் சொல்லப்பட்டனவேயாம்.

தற் றன்மையில்லாதவன் யான்; அரியும் யான், அரனும் யான்; அயனும் யான்; இம்மூவர்க்குங் காரணன் யானே. ()

கழுவப்பட்ட மலின (பாவ) மயன் யான்; நீக்கப்பட்ட சம்சாரக்கிலேசக் கூட்டமுள்ள அந்தக்கரண முடையவன் யான்; க்ஷகார மீறுயுள்ள எழுத்துக்களோடு கூடிய நாநாவித சாஸ்திரீய, இலௌகிக வியவகாரங்களுக்குக் காரண பூதன் யானே. (கசச)

இப்பல்வகை வடிவம் யானென்று கூறுவதனு லென்ன பயன்? திவலை நுரை அலைகள் நிச்சயமாகச் சமுத்திரத்தினும் வேறு வஸ்துக்களாகாமைபோல, இச்சராசர மாகிய விசுவம் யானே; வேறு வஸ்துவின்மையால். (கசரு)

எனக்குப் புகலிடம் தாயுமல்ல; தந்தையுமல்ல; புத்திரருமல்ல; சகோதாருமல்ல பிறருமல்ல; எனக்குச் சிரசின் பேரில் தேசிகரால் வைக்கப்பட்ட இச்சரணமே (பாதங் களே) மேலான சரண (புகலிட) மாம். (கசசு)

தேசிகரது சரணம் சிரத்தில் எல்லையின்றியுளது; அவர் கண்களில் கருணையுளது; அவரால் உபதேசிக்கப்பட்ட ஞானம் என் உள்ளத்தின்கண் உளது. இதற்குமேல் ஜன்ம சாபல்வி யம் (பிறப்பின் பயனுடைமை) வேறு யாதுளது? (கூறப் பட்ட பயன் இதுவே.) (கசஎ)

சந்திர கிரணங்களின் சாரம் (அமுதம்) போல் பெருக் காயுள்ளனவும், விரும்பிய வரத்தைத் தருவதில் சாமர்த்திய

விசேஷமுள்ளனவும், குளிர்ச்சியுள்ளனவுமாகிய ஸ்ரீ குரு பாத கடாக்ஷங்கள் சித்தத்திலுள்ள மூவகைத் தாபங்களையும் நீக்குகின்றன. (கசஅ)

சஞ்சல சித்தமாகிய மிகப் பெரிய மண்டூகத்தை விழுங்கியதனால் சந்தோஷமடைந்த ஒரே சின்மயமென்னும் பாம்பானது இருதயமென்னுங் குகையில் தூங்குகின்றது.(கசகூ)

வியாபகமான ஆநந்தஞான சமுத்திரமென்னும் என்னிடத்து ஆயிரக்கணக்கான பிரமாண்டக் குமிழிகள் மாயா விசேஷத்தாற் சிறப்புள்ளனவாய்த் தோன்றித் தோன்றி மீண்டும் அழிகின்றன. (கரு0)

ஜன்மாந்தரத்தின் பெரும் பாக்கியமென்னும் அநுகூலமுள்ள காற்றோடு கூடிய குரு கிருபையென்னுங் கப்பலால், சகித்தற்கரிய துக்கமென்னும் அலைகளோடு சம்சாரமென்னும் சாகரம் என்னால் கடக்கப்பட்டது. (கருக)

மோகமென்னும் அந்தகார மிருக்குங்கால் அது இது என்று சகல ஜகத்துங் காணப்பட்டது. ஞானசூரிய னுதிக்கவே யொன்றுங் காணப்படவில்லை. இவ் வாச்சரிய மென்னே?

யான் தேவர்களை நமஸ்கரிக்கிறதில்லை; தேவர்களை யதிக்கிரமித்துள்ள தெய்வத்தைத் தேவர்கள் சேவிக்கிறதில்லை; அதன்பின் விதியுக்தமான கர்மத்தைச் செய்கிறதில்லை. ஆதலால் சர்வாத்ம சொரூபத்தின்பொருட்டு முயற்சி செய்யுமெனக்கு நமஸ்காரம் நமஸ்காரம். (கருங)

இவ்வாறு கூறிய ஆத்மஞான லாபத்தை அடிக்கடி சிந்தித்து, ஆநந்தாவஸ்தை யடைந்த அதிகாரியால் (ஜீவன் முக்தனால்) பிராரப்தகர்மமுடிவில் (தேகநீங்குங் காலத்து) மேலானதும் கைவல்லியமு (உவமை யற்றது) மான பதம் அடையப்படுகின்றது. (௧௫௪)

மோகாந்த காரத்தைக் கெடுப்பதும் சம்சாரமாகிய கரையற்ற சமுத்திரத்தின் கரைசேர்ப்பிப்பதுமான சுவாத்ம நிரூபணம்என்னும்இந்தப் பிரகரணத்தைத் தக்ஷிணாமூர்த்தியாகிய பரமசிவன் செய்தருளினார். (இதனால் ஆராதிக்கப்படுவது ஆராதிப்பவன் என்பவற்றின் ஐக்கியத் தன்மை சூசிப்பிக்கப்பட்டதாகின்றது). (௧௫௫)

அஞ்ஞான விருளைக் கெடுத்ததும், விஞ்ஞான தாமரையை மலரச்செய்ததுமான ஸ்ரீநிவாச (விஷ்ணுவாகிய) குருவென்னும் சூரியன் எனது மனமென்னும் ஆகாயத்தில் பிரகாசிக்கின்றது. (இதனால் குரு தெய்வங்களின் ஐக்கிய பாவனையே ஆத்மத் தன்மையை விளக்குதற்குச் சாதனமாமென்று சொல்லப்பட்டதாகின்றது. (௧௫௬)

சுவாத்தும நிரூபணம்

முடிந்தது.